# நெஞ்சை விட்டகலா......

அவளது செயலாற்றலும் திறமையுமே இறுதி நாட்களில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புப் படையணி ஒன்றுக்கு பொறுப்பாளராக அவளை நியமிக்க வைத்தது. அந்தப் படையணியைத் திறம்பட வழிநடத்தி பெரியபெரிய விடயங்களையெல்லாம் பெண்போராளிகள் சாதிக்க வேண்டும் என்று தனது சின்னஞ்சிறிய இதயத்துக்குள் ஏராளமான கனவுகளைச் சுமந்து கொண்டிருந்தாள் அவள். 1997-06-18 அன்று அவளது துடிப்பு அடங்கிப்போன வேளையில் அந்தக்கனவு மொட்டுக்கள் முகையவிழ்த்து பூக்களா கிமிருந்தன. அவற்றை அள்ளியெடுத்து எமது இதயங்களோடு இறுகத் தழுவிக்கொண்டு எம்மால் நிமிர்ந்து நிற்கமுடிந்ததே தவிர, கண்ணீர் சொரிய முடியவில்லை. ஆம் அவளுக்கும் அதுதான் விருப்பம். அவளது நினைவுகளை மீட்டுப் பார்க்கும் இந்தச் சிறிய பக்கத்தில் மட்டும், நாம் எழுதிய மொழியில் மட்டும் அடங்கி விடாது.

நீண்டு பரந்து எம்மில் வியாபித்து.......

முகுந்தா மறந்துவிட முடியாத ஒருத்தி.

**********

கல்கியின் "பொன்னியின் செல்வனில்" வருவாரே ஒரு முதிய வீரர். பெரிய பழுவேட்டரையர் என்று அவருக்குப் பெயர். உடலில் அறுபத்து நான்கு வீரத்தழும்புகள் இருக்கிறதாம் அந்த வீரக்கிழவருக்கு. "எங்கள் தாட்சாயினியும் பெரிய பழுவேட்டரையரைப் போலத்தான்" என்றாள் தாட்சாயினியின் தோழி ஒருத்தி சற்றுப் பெருமையாக. உண்மைதான். தாட்சாயினியின் உடலிலுள்ள வீரத் தழும்புகளை நின்று நிதானமாக எண்ணினால் அறுபத்துநான்குக்கும் அதிகமாகவே இருக்கும்.

தாட்சாயினி!

அந்த வயதுக்கேயுரிய முதிர்ச்சி. களங்களில் அவள் காட்டிய உக்கிரம், தன்னோடு நிற்கும் போராளிகளில் வைத்திருக்கும் அன்பு, பராமரிப்பு, அவளது வளர்ப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக தவறு விடுகின்ற கணங்களில் அவளது தண்டிப்பு எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து இவளை எங்களுள் ஆளுமையுடையவளாக நிலைநிறுத்தியது.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த பெரும்பாலான சண்டைக்களங்களில் கம்பீரமாக ஒலித்த கட்டளைக் குரலுக்குரியவளை 1997-08-04 அன்று காலையின் பின் நெருப்பள்ளிவீசும் களம் இழந்திருந்தது. பல சண்டைக்களங்களில் உடல்நிறையக் காயங்களைப் பெற்றுவந்து, தப்பிப்பிழைத்து, இனிக் காயப்படுவதற்கே இடமில்லை என்ற நிலையில்கூட களத்தைவிட்டு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பவள்.

பலாலி காவல் நிலைகள், மணலாறுகளம், மண்டைதீவு, சூரியக்கதிர், பூநகரி, தொண்டைமானாறு-ஒட்டகப்புலம் வரையான காவலரண் அழிப்பு என்ற நீண்ட பட்டியல் அவளுக்குரியது. திறமையான சண்டைக்காரி. பூநகரிச் சண்டையில் அவளுக்கு இடுப்பிலும் தோள்மூட்டிலும் பெரியகாயம்.

"இந்தக்காயங்களோடு உங்களாலை தொடர்ந்தும் பயிற்சி எடுத்து சண்டைபிடிக்க ஏலாது: வெளி நிர்வாக வேலைகளைச் செய்யுங்கோ" என்று கூறப்பட்டும் கேளாமல், 'தன்னால் முடியும், தான் தொடர்ந்து சண்டையிலேயே நிற்பேன்' என்று விடாப்பிடியாய் நின்று செய்து காட்டியவள்.

மணலாறு மின்னல் சண்டையின்போது அவளுக்கு வயிற்றில் பெரியகாயம் ஏற்பட்டு, வெளிவந்து விழுந்த குடலை எடுத்து உள்ளே வைத்துப் பொத்தியபடி, இரத்தம் ஒழுக ஒருவரின் உதவியுமின்றி அரை மணித்தியாலம் நடந்தே மருத்துவ ஒழுங்குசெய்யும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளது மனஉறுதியைக்காட்ட இதைப்போல இன்னும் எத்தனையோ சம்பவங்கள்........

ஓரளவு பதட்டமில்லாத காவல்நிலைப் பகுதிகளில் அவள் நிற்கும்போது அவள் அங்கு நடத்துகின்ற தடபுடலுக்குக் கணக்கில்லை. அதுவும் கடற்கரையோரக் காவல்நிலைப் பகுதியாயின் தாட்சாயினி நண்டு பிடித்து, வாய்க்கு ருசியாய் சமைத்துக் கொடுப்பாள். தனது குழுவிலுள்ள வயதில் சின்னப் போராளிகளுக்கு தானே உணவு குழைத்துக் கொடுப்பாள். ஒரு அம்மாவுக்குரிய பொறுமையும் பண்பும் கண்டிப்பும் அவளிடம் உண்டு.

ஆள் சரியான தேத்தண்ணிச்சாமி, விடாக்குடியன், மொடாக்குடியன் மாதிரி காலம் நேரமில்லாமல் தேநீர் தயாரித்து, தானும் குடித்து எல்லோருக்கும் கொடுப்பாள். தேனீயைப் போலவே அவளும் சரியான சுறுசுறுப்புத்தான்.

சூரியக்கதிர்-1இல் அவளுக்குப் பெரிய காயம். எறிகணை அவளின் காதோடு சேர்த்து கன்னத்தசைகளையும் பிய்த்துச் சென்றதோடு, மார்பிலும் பெரும் காயத்தை ஏற்படுத்தியது.

ஒருமுறை அவளது குழு ஒரு காவற்பகுதியில் நின்றது. அப்போது அவள் குழுவிலுள்ள ஒரு போராளிக்குக் காய்ச்சல். ஆறியும் ஆறாமலும் இருந்த வயிற்றுக்காயத்தைப் பொருட்படுத்தாது, தானே மரத்தில் ஏறி இளநீர் பிடுங்கிக் கொடுத்துவிட்டு, வயிற்றுநோவெடுக்க, ஒருவருமறியாது தனியாகப் போயிருந்து வயிற்றைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

எப்போதும் இயக்கத்தின் நலன், கட்டுக்கோப்பு, எல்லாவற்றுக்கும் மேலாக எமது தலைவர் என்று தீவிரமான பற்று வைத்த போராளி. நாளும் பொழுதும் இதைப்பற்றியே சிந்தித்து, தனக்குக் கீழே உள்ளவர்களை வளர்த்தெடுத்த ஆற்றல் நிறைந்த போராளி. மிகத் திறமையான சண்டைக்காரி. அவளோடு நின்ற நாட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போராளிக்கும் உயிர்த்துடிப்பானவை. நெஞ்சை விட்டு அகலாதவை. ✳

# விலை!

**போ**ராட்டத்திற்குக் கவசமாய் இருந்த

ஏராளமான குடும்பங்களுள் அம்மாவினுடையதும் ஒன்று.

தென்மராட்சியின் மையமாய் உள்ள

மீசாலை ஊர்தான் அந்தக் குடும்பத்தின் மடி.

ஒன்றொன்றாக அம்மாவின் பிள்ளைகளில் மூவர்

இயக்கத்துக்குப் போய்விட்டனர். முதலில் போனவன் சேகர். மதுவன் அடுத்ததாகப் போனான்.

கேரதீவு இறங்கு துறையில் இந்திய வானூர்திகள்

பொழிந்த நெருப்பு மழையில் கண்களுக்கு முன்னால் கருகிப் போன அப்பாவைப் பறிகொடுத்து விட்டு, கதறிக் கொண்டு வந்தவன் அவன். நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த அந்த நினைவோடேயேதான் மதுவன் புறப்பட்டுப் போனான்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கான்சும் வெளிக்கிட்டுப் போய் விட்டான்.

அம்மாவுக்குத் துயர் இயக்கத் திற்குப் போனதற்காக

அல்ல, மூவரும் போய்விட்டதற்கு.

அம்மா தலைவருக்கு வேண்டுகோள் எழுதினாள்.

"தயவு செய்து மதுவனை மட்டும் என்னிடம்

அனுப்பி வையுங்கள்"

மதுவன் கடைசிப் பையன். பெற்றவர்களின்

அபரிமிதமான பாசம் அவன் மேல் இருந்தது.

வீட்டு வேலைகளிலெல்லாம் அம்மாவின் கையாள்

அவன் தான்.

அம்மா காத்திருந்த தலைவரின் பதிலோடு மூத்தவன்

சேகர் வீட்டுக்கு வந்த ஒரு மகிழ்வான இரவு. அந்தச் சந்தோசத்தில் அம்மாவுக்கு தூக்கமே வரவில்லை. அம்மாவுக்குச் சேதியைச் சொன்ன சேகர், இரவோடு இரவாகவே தம்பியைக் கூட்டிவர மணலாற்றுக்குப் பயணமானான்.

மறுநாள் - மணலாற்றில், ஒரு வழியாக அன்பு அண்ணையைத் தேடிப் பிடித்துச் சந்தித்து,



கடிதத்தைக் கொடுத்து கதைத்த போது - சண்டை ஒன்றிற்காக சற்று எட்டத்திற்குப் போய்விட்ட ஒரு தாக்குதலணியில் மதுவனும் போன தகவலைச் சொன்ன அன்பு அண்ணன், இரண்டு நாளில் அந்த அணி திரும்பிவிடும் என்றும் நின்று அவனை அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.

இரண்டு நாட்களாகத் தம்பிக்காகக் காத்திருந்தான் சேகர். முந்திரிகைக் குளம் என்ற ஊருக்குப் பக்கத்திலிருந்த இராணுவ மினிமுகாமைத் தாக்கி அழித்த அந்த அணி, இரண்டாம் நாள் திரும்பியது.

சேகர் ஆர்வத்துடன் தம்பியைத் தேடிய வேளை முகாமிலிருந்த எல்லோரும் அந்த வீரர்களைச் சூழ்ந்துகொண்ட பொழுது - வெற்றியோடு மீண்ட தோள்களில் மதுவன்......! அந்த வெற்றிக்கு விலையாகிப் போய்விட்ட மேஜர் சங்கர், முசோலினியுடன் 2ஆவது லெப். மதுவன்......!

சேகருக்குத் தலை வெடித்துச் சிதறியதைப் போலிருந்தது.

தம்பியைக் கூட்டிவரப் போன அண்ணன், தம்பியின் உடலைக் கொண்டு வந்தான்.

எல்லாம் முடிந்து விட்டது.

இதன் பிறகு - அடுத்தவன் 'கான்ஸ்' ஐ இயக்கம் அம்மாவிடம் அனுப்பி வைத்தது.

அவனுக்கோ வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. 'இனிமேல் தலைவருக்குக் கடிதம் எழுதக்கூடாது' என்று எச்சரித்து விட்டு, ஒரு நாள் மீண்டும் புறப்பட்டுப் போய் விட்டான்.

போனவன் ஆனையிறவு படைத்தளத்திற்கான அரணியிலிருந்து அடிக்கடி வந்து, அம்மாவைப் பார்த்து விட்டுப் போனான்.

அம்மாவுக்கு உள்ளூரப் பயம் - "சண்டையில் நிற்கிறான் அவனுக்கும் ஏதாவது நடந்திட்டால்......"

ஒரு நாள் வீட்டுக்கு வந்தவன், அம்மாவுக்குச் செய்தியொன்றைச் சொன்னான் - "என்னை வேறு இடத்திற்கு மாத்தியிருக்கு அம்மா. நாளைக்கு மட்டும் தான் ஆனையிறவில் - போகும் போது நாளைக்கு இங்கே வந்திட்டுப் போறேன்."

அம்மாவுக்கு ஆறுதல். இரவு நிம்மதியாக உறங்கிக் காலையில் எழுந்தாள்.

பின்னேரம் பிள்ளை வருவான். நல்ல சாப்பாடு செய்து கொடுக்க வேணும் - அம்மா ஆர்வத்தோடு சமையலறையில் மூழ்கிப் போனாள்.

மாலை வந்து இரவாகிய போதும் - பிள்ளை வரவில்லை. அம்மா காத்திருந்த போது அந்தச் செய்திதான் வந்தது.

அன்று காலை நடந்த சண்டை ஒன்றில் அம்மாவின் அந்த மைந்தனும்......

கப்டன் கான்ஸ்

அம்மாவின் உச்சந்தலையிலிருந்து நுனிக்காலுக்கு மின்சாரம் பாய்ந்தது !

தி. இனியவன்